**கவனிக்க.-** 2008.05.09ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1550 - 2008 මැයි 16 වැනි සිකුරාදා - 2008.05.16**

*1550 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 486 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 490 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 23 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 09 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## அரசகரும மொழிகள் ஆணைக்குழு

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவில் பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இந்த அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள நல்ல உடல் ஆரோக்கியமும் குண நலமுடைய இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. நிர்வாக உத்தியோகத்தர்
2. தலைமை எழுதுநர்
3. ஆராய்ச்சி உதவியாளர்
4. கூட்டிணைப்பு உதவியாளர்

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரம் "தலைவர், அரசகரும மொழிகள் ஆணைக்குழு, 4 ஆம் மாடி, "பாஷா மந்திரய", 341/7, கோட்டே வீதி, இராஜகிரிய" என்னும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து பதிவுத் தபாலில் 2008.05.31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்குறித்த விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும். இந்தத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**1. நிர்வாக உத்தியோகத்தர் (01 பதவி) :**

**1.1 கல்வித் தகைமைகளும் அனுபவங்களும் :**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்துடன் கனிஷ்ட நிறைவேற்று பதவி நிலையின் ஆளணி முகாமைத்துவம் பொது முகாமைத்துவம் என்பவற்றில் இரண்டு (02) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) ஆளணி முகாமைத்துவம், பொது முகாமைத்துவ பணிகளையாற்றுபவராயும் எழுதுநர் சேவையில் அதிஉயர் தரத்தைச் சேர்ந்தவராயும் இத்தரத்தில் 3 வருட அனுபவம் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அரசாங்கத்தில் அல்லது மாகாண அரசாங்கத்தில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் அல்லது நியதிச் சட்ட சபையொன்றில் பிரதான எழுதுநராக/ பதவி நிலை உதவியாளராக அல்லது அதற்கு நிகரான ஒரு சேவையில் ஐந்து (05) வருட அனுபவம் உட்பட பொது எழுதுநர் சேவையின் 1 ஆம் வகுப்பில் அல்லது அதற்கு நிகரான சேவை ஒன்றில் பத்துவருட திருப்திகரமான சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

(iv) அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைமை எழுதுநர் பதவியில் ஐந்து (05) வருட சேவை உட்பட எழுதுநராக 12 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (1) பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :-

(i) அரசாங்க நிருவாகத்தில் பி. எஸ். சி./பி. கொம் பட்டம்
(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் ஆளணி முகாமைத்துவ டிப்ளோமா.

(2) நியமனம் பெறுநர் நிரந்தரமாக ஆணைக்குழுவிற்கு சேருதல் வேண்டும் அல்லது நிரந்தர பதவிக்கு மீண்டும் செல்லுதல் வேண்டும் என்பதற்கமைவாக இரண்டு வருட அனுவதிப்பு அடிப்படையில் சேவையாற்றும் பொருட்டு அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

1.2 **பிற தகைமைகள்** - விண்ணப்பதாரர் -

(i) கணனியைக் கையாளும் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ii) கடிதத்தொடர்புகளைச் சுயமாகக் கையாளும் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) ஆங்கில மொழியில் அதியுயர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(iv) தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களில் அறிவுடையவ ராயிருத்தல் வேண்டும்.

(v) வருடாந்த வரவு செலவுத்திட்டம்/ இறுதிக் கணக்கு என்பவற்றை தயாரிப்பதில் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

(vi) உத்தியோகத்தர்களுடனும் பொது மக்களுடனும் நல்ல தொடர்புடையவராயிருத்தல் வேண்டும்.

1.3 **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 2,90,580 – 17X5,700 - ரூபா 3,87,480 ஆகும். (தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரின் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் அமைவாக அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானதொரு படி நிலையில் வைக்கப்படுவார்.)

1.4 **வயதெல்லை**.- 2008.05.31 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இங்கே குறிப்பிடப்பட்ட உச்ச வயதெல்லை அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபனங்களிலோ சபைகளிலோ பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தாது)

**2. தலைமை எழுநர் (01 பதவி) :**

**2.1 கல்வித் தகைமைகளும் அனுபவங்களும் :**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டத்துடன் ஆளணி முகாமைத்துவம், பொது முகாமைத்துவம் என்பவை சம்பந்தமான பணிகளையாற்றும் கண்காணிப்பாளர் நிலையில் இரண்டு (02) வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) அரசாங்கத்தில் அல்லது அரசாங்க கூட்டுத்தாபனத்தில் அல்லது நியதிச் சபையொன்றில் பிரதான எழுதுநராக/ பதவியினர் உதவியாளராக மூன்று (03) வருடங்கள் சேவையாற்றிய அனுபவம் உட்பட பொது எழுதுநர் சேவையின் 1 ஆம் வகுப்பில் அல்லது அதற்கு நிகரான ஒரு சேவையில் எட்டு (08) வருடங்கள் திருப்திகரமான சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அரசகரும மொழிகள் ஆணைக்குழு சேவையில் எழுதுநர் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளவரும் அதே

ஆணைக்குழுவில் எழுதுநராக ஐந்து (05) வருட திருப்திகரமான சேவை உட்பட எழுதுநராக பத்து (10) வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்-

(i) பொது நிருவாகத்தில் பி-எஸ்-சி (சிறப்பு)/பி. கொம் பட்டம்
(ii) அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் ஆளணி முகாமைத்துவ டிப்ளோமா.

*2.2 பிற தகைமைகள் :*

(i) விண்ணப்பதாரர் கணனியைக் கையாளும் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ii) கடிதத் தொடர்புகளைச் சுயமாகக் கையாளும் திறமை உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(iii) ஆங்கில மொழியில் அதியுயர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) வருடாந்த வரவு செலவு/ இறுதிக் கணக்கு என்பவற்றைத் தயாரிப்பதில் அனுபவமுடையவராயிருத்தல் வேண்டும்.

*2.3 **சம்பள அளவுத்திட்டம்**.- இந்தப் பதவிக்குரிய மாதாந் சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 2,45,880 – 15X3,900 - ரூபா 3,04,380 ஆகும். (தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரின் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் அமைவாக அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானதொரு படி நிலையில் வைக்கப்படுவார்).*

*2.4 **வயதெல்லை**.- 2008.05.31 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இங்கே குறிப்பிடப்பட்ட உச்ச வயதெல்லை அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபனங்களிலோ சபைகளிலோ பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தாது)*

**3. ஆராய்ச்சி உதவியாளர் (03 பதவிகள்) :**

***3.1 கல்வி மற்றும் பிற தகைமைகள் :***

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து மொழிகள் தொடர்பில் பெற்ற பட்டம்
(ii) சிங்கள, தமிழ், ஆங்கில அறிவு
(iii) கணனி பற்றிய அறிவு
(iv) பின்வரும் துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் பெற்றுள்ள கல்வி/தொழிற்றுறைத் தகைமைகள்
மொழிபெயர்ப்புப் பணி
தகவல் தொழில்நுட்பம்
சட்டம்
இதழியல்/வெகுசனத் தொடர்பு
வேலைத்திட்ட முகாமைத்துவம்
(v) அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் தொடர்பு கொள்வதில் பெற்றுள்ள அனுபவம், மேலதிக தகைமை யொன்றாகக் கருதப்படும்.
(vi) பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :-

மொழி கற்பித்தல்/ பயிற்சி தொடர்பிலான கோட்பாட்டு அறிவையும் தொழில் அனுபவத்தினையும் அல்லது இரண்டில் ஒன்றைப் பெற்றிருத்தல்.
பயிற்சி நடவடிக்கையில் கோட்பாட்டு அறிவு/அனுபவம்.
கணக்கு நடவடிக்கை தொடர்பில் கோட்பாட்டு அறிவு/ அனுபவம்.

*3.2 **ஏனைய தகைமைகள்**.-* கடந்த காலத்துக்குள் ஏதேனும் தவறான நடத்தை பொருட்டு தண்டனை பெற்றிராதிருத்தல்.

*3.3 **சம்பள அளவுத்திட்டம்**.-* ரூபா 1,82,880 – 10X2,220 – 4X3,360 – 7X3,840 - ரூபா 2,94,240 ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப தாரரின் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் அமைவாக அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானதொரு படி நிலையில் வைக்கப்படுவார்.

*3.4 **வயதெல்லை**.- 2008.05.31 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இங்கே குறிப்பிடப்பட்ட உச்ச வயதெல்லை அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபனங்களிலோ சபைகளிலோ பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தாது)*

**4. கூட்டிணைப்பு உதவியாளர் (05 பதவிகள்) :**

***4.1 கல்வி மற்றும் பிற தகைமைகள் :***

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இருந்து மனிதவள முகாமைத்துவம் அல்லது சமூக விஞ்ஞானம் தொடர்பில் பெற்ற பட்டம்
(ii) நிருவாகம்/ கூட்டிணைப்பு/ புலனாய்வு தொடர்பிலான அனுபவம்.
(iii) பின்வரும் துறைகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் பெற்றுள்ள கல்வி/ தொழிற்றுறைத் தகைமைகள் :
கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம்
சட்டம்
இதழியல்/வெகுசனத் தொடர்பு
வேலைத்திட்ட முகாமைத்துவம்
(iv) சிங்கள, தமிழ், ஆங்கில அறிவு

(v) பின்வரும் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :-

மொழி கற்பித்தல்/ பயிற்சி தொடர்பிலான கோட்பாட்டு அறிவையும் தொழில் அனுபவத்தினையும் அல்லது இரண்டில் ஒன்றைப் பெற்றிருத்தல்.
பயிற்சி நடவடிக்கையில் கோட்பாட்டு அறிவு/அனுபவம்.
கணக்கு நடவடிக்கை தொடர்பில் கோட்பாட்டு அறிவு/ அனுபவம்.

*4.2 **ஏனைய தகைமைகள்**.-* கடந்த காலத்துக்குள் ஏதேனும் தவறான நடத்தை பொருட்டு தண்டனை பெற்றிராதிருத்தல்.

*4.3 **சம்பள அளவுத்திட்டம்**.-* ரூபா 1,82,880 – 10X2,220 – 4X3,360 – 7X3,840 - ரூபா 2,94,240 ஆகும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்ப

தாரரின் தகைமைகளுக்கும் அனுபவங்களுக்கும் அமைவாக அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானதொரு படி நிலையில் வைக்கப்படுவார்.

4.4 **வயதெல்லை**.- 2008.05.31 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இங்கே குறிப்பிடப்பட்ட உச்ச வயதெல்லை அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அரச கூட்டுத்தாபனங்களிலோ சபைகளிலோ பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தாது)

5. **வினைத்திறன்காண் தடைகள்**.- பதவியில் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 வருடங்களுக்குள் வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். வினைத்திறன் தடைப்பரீட்சையின் விபரங்கள் பின்வருமாறு. இது தேவைக்கேற்ற திணைக்களத் தலைவரால் வருடத்துக்கொரு தடவை நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சை யொன்றாகும். இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு மேலதிகமாக, விண்ணப்பதாரர், அவர்களால் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சி ஆய்வுக்கடடுரை ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) முதலாம் வினாத்தாள்.- இவ்வினாத்தாளானது அலுவலக முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பெறும் தாபன நடவடிக்கை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளில் அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு தாபனவிதிக்கோவையின் I ஆம் II ஆம் தொகுதிகளையும் நிதி ஒழுங்கு விதிகளையும் அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும். நாளாந்த அலுவலக நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பெறும் விடயங்கள் பால் விசேட கவனம் செலுத்தப்படும். (தாபனவிதிக் கோவையினதும் நிதி ஒழுங்கு விதியினதும் பொருத்தமான அத்தியாயங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்) இவ்வினாத்தாளுக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்படும். சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(ii) இரண்டாம் வினாத்தாள் (ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரை தயாரித்தல்).– விண்ணப்பகாரர் தனது விடயத்துக்குப் பொருத்தமான நடைறை சமூக – பொருளியல் தலைப் பொன்றின் கீழ் சுயாதீன ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும். இவ் ஆய்வுக் கட்டுரையானது, ஆராய்ச்சி முறையியல்களைப் பின்பற்றி தயாரிக்கப்படல் வேண்டுமென்பதுடன் ஆகக்குறைந்தது 5000 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். இவ்வாராய்ச்சி ஆய்வுக் கட்டுரையைத் தயாரிக்கும்போது நியமிக்கும் அதிகாரி பொருத்தமான மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுப்பார். ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரை தகுதிகாண் காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆராய்ச்சி கட்டுரைக்கு 100 புள்ளிகள் ஒதுக்கப்படுவதுடன் சித்தி பெறுவதற்கு ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

முதலாம் வினாத்தாள் பொருட்டு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளியைப் பெறும் விண்ணப்பதாரர்களும் மேற்பார்வையாளர்களின் மதிப்பீட்டுக்கிணங்க ஆராய்ச்சிப் பத்திரத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த விண்ணப்பகாரர்களும் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

6. **ஆட்சேர்ப்பு முறை**.- அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரரை இதற்கென நியமிக்கப்பட்ட விசேஷ சபையொன்றி னால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தப் படுவதன் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

7. **பொதுவான தகவல்களும் விண்ணப்பிக்கும் முறையும்**.- (அ) பதவிகள் நிரந்தரமானவை. அத்துடன் நியமிக்கப்படுபவர் தொழிலாளர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) பங்களிப்பு செய்தல் வேண்டும். திரட்டிய சம்பளத்தில் 12% பணிகொள்பவரும் 8% பணியாளரும் செலுத்தல் வேண்டும். அத்துடன் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பணிக்கொள்பவர் 3% செலுத்துவார்.

(ஆ) தகுதிகாண் காலம் மூன்று வருடங்களாகும். நியமிக்கப்பட்டவர் தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழிகள் திணைக் களத்தினால் நடாத்தப்படும் உயர்தர மொழி கற்கை நெறியில் சிங்கள உத்தியோகத்தராயின் தமிழும் தமிழ் உத்தியோகத்தராயின் சிங்களமும் சித்தியடைதல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் நீடிக்கப்பட்ட தகுதிகாண் காலம் முடிவடைவதற்குள்ளும் தேவையான மொழித் தேர்ச்சி பெற்றிருக்கா விட்டால் அவரின் சேவைக் காலம் முடிவுறுத்தப்படும்.

(ஈ) அரச சேவையில், மாகாண அரச சேவையில், நியதிச்சட்ட சபைகளில் கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள/நிறுவனத் தலைவர்களூடாகவே அனுப்புதல் வேண்டும்.

(உ) தகைமையுள்ள வேட்பாளர்கள் மட்டுமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார். தெரிவு நேர்முகப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் செய்யப்படும்.

(ஊ) மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமையாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும்.

தலைவர்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழு,
4 ஆம் மாடி,
"பாஷா மந்திரய",
341/7, கோட்டே வீதி,
இராஜகிரிய,
2008.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

.............................................................................................. பதவி

1. விண்ணப்பதாரர் பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   1.2 முழுப் பெயர் :-----.

2. முகவரி :-
   2.1 நிரந்தர முகவரி :-----.
   2.2 அலுவலக முகவரி (எவையேனும்) :-----.

3. பால் :

ஆண் 1

பெண் 2

(பொருத்தமான இலக்கத்தினைக் குறிக்கவும்)

4. வயது :-
(பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்று இணைக்கவும்)

4.1 பிறந்த திகதி :-
ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

4.2 2008.05.31 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

5. விவாக நிலை :-----.

6. தேசிய இனம் :-----.

7. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்) :-

(i) க. பொ. த. சாதாரணம் :
ஆண்டு :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

(ii) க. பொ. த. உயர்தரம் :
ஆண்டு :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(iii) பட்டம் :

| பட்டத்தின் பெயரும் பல்கலைக்கழகமும் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(iv) டிப்ளோமா பட்டம் :

| டிப்ளோமா பட்டத்தின் பெயரும் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயரும் | ஆண்டு | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(V) வேறு ஏதேனும் கற்கைநெறிகளைப் பின்பற்றியிருந்தால் :

| கற்கைநெறியின் பெயர் | கற்கைநெறி தொடர்புகொண்ட கற்கைநெறிக் காலம், அமைப்பின் பெயர் | கற்கைநெறியின் காலம் |
|---|---|---|
| | | |

8. அனுபவம்

| பதவிப் பெயர் | நிறுவனம் | காலம் | விடுகை பெறுவ தற்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |

9. கணனி அறிவுச் சான்றிதழ் :-----.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

10. ஏதாவது தவறுகள் பொருட்டு நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா ? (ஆம்/இல்லை) :-----.

ஆம் எனில், அவை தொடர்பான தகவல்களைக் குறிப்பிடவும் : -----.

இந்த விண்ணப்பத்தில் தரப்பட்டிருக்கும் விடயங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டிருக்கும் விபரங்களில் எவையேனும் நான் தெரிவு செய்யப்படுமுன்னர் பொய்யானவையாக அல்லது சரியற்றவையாக காணப்படும் சந்தர்ப்பத்தில் நான் தகைமை நீக்கத்துக்கு உட்படுவேன், என்பதையும் அத்தகைய பொய்மை அல்லது சரியின்மை நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரிய வந்தால் நட்டஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**அரச திணைக்களம்/அமைச்சு/அதிகார சபை/ஏனைய தலைவரது சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ......................................................... இத்திணைக்களத்தில்/ அமைச்சில்/ கூட்டுத்தாபனத்தில்/ அதிகார சபையில்/ மாகாண சபையில்/ ஏனைய ................................ ஆக பணியாற்றும் அவர்களது விண்ணப்பத்தை இத்தால் அனுப்புகிறேன். இவரது வேலையும் நடத்தையும் திருப்தியானது/திருப்தியற்றது. அவரை ........................................................................................... இருந்து விடுவிக்க முடியும்.

........................................................................
திணைக்கள/அமைச்சு/கூட்டுத்தாபன/அதிகார சபை/ஏனைய தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

............................................................
கையொப்பம்.

5-237

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

மேலதிக விவாக பதிவாளர் பதவி இரத்துச்செய்தல்–கம்பஹா மாவட்டம்

இல. 2008.03.07 ஆந் திகதிய 1540 ஆம் இலக்க வெள்ளிக்கிழமை வர்த்தமானி பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட கம்பஹா மாவட்டத்தில் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் 08, 09, 10 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரிவுகள் தொடர்பில் பிரிவுகள் மீளளிப்புச் செய்யவேண்டியுள்ளதால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்குரிய விண்ணப்பம் கோருதலை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

இது தொடர்பாக இதுவரை விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளவர்களின் விண்ணப்பம் பதிவுத்தபாலில் திருப்பி அனுப்பப்படும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் |
|---|---|---|
| 1. கம்பஹா | பியகம | சியானே கோறளை மேற்கு பிரிவின் மீகஹவத்தை பிரதேச மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி |
| 2. கம்பஹா | அத்தன கல்ல | சியானே கோறளை மேற்கு பிரிவின் பெம்முல்ல மற்றும் கஹலேகொட பிரதேச மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி |
| 3. கம்பஹா | கம்பஹா | சியானே கோறளை மேற்கு பிரிவின் அமுக்கம, போகமுவ பிரதேச மேலதிக விவாக (பொது பதிவாளர் பதவி |

2008.04.28.

5-323

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2008**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சைகள் 2008 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் பேராதனையில் நடைபெறுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் இரண்டுக்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்**.- முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் தடைகள் நிருவகிக்கின்ற பாடவிதானப் பத்திரம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் சேவை யாப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உத்தியோகத்தர்களினுடைய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 1 பாடத்திட்ட இணைப்பு 'அ' விலும் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினைத்திறமைகாண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரு தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்கள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை

| 1 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| பாட இல. | விடயம் | நேரம் (மணி) | பாட இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | நிதி முறைமைகள் | 03 | 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | நிருவாகம் | 03 | 02 | 2 ஆம் பகுதி | |
| 03 | திணைக்கள பிரமாணம் வினாப்பத்திரம் 01 | 02 | 03 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் I | 03 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் 02 | 03 | 04 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் II | 03 |
| 05 | விசேட பத்திரம்* | 03 | 05 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் III | 03 |
| | | | 06 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IV | 03 |
| | | | 07 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் V | 03 |
| | | | 08 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VI | 03 |
| | | | 09 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VII | 03 |
| | | | 10 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VIII | 03 |
| | | | 11 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IX | 03 |
| | | | 12 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் X | 03 |
| | | | 13 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் XI | 03 |

*இதன் பொருட்டு கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் ; பகுதி 3 இல் இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். ஒரு வினாப்பத்திரத்திற்கு ஆகக்குறைந்தது 40 புள்ளிகளாவது பெறல் வேண்டும்.

*5. 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தையுடைய திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.*

*திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உட்பட) பரீட்சைகளுக்கும் தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவையில் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர் சேவையில் சேர்வதற்கு தகுதிபெற்ற மொழி அல்லது அரசாங்க மொழியாகும்.*

*6. விண்ணப்பதாரிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள வினாப்பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன :-*

(i) *நிதி முறைகள்*
(ii) *நிருவாகம்*
(iii) *திணைக்களப் பிரமாணங்கள்* I
(iv) *திணைக்களப் பிரமாணங்கள்* II

*7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.*

*8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய புள்ஸ்காப் தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இரு பரீட்சைகளுக்கும் சமுகமளிப்பதானால் வெவ்வேறாக ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

*9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.*

*10. விண்ணப்பப்பத்திரங்கள் 2008, யூன் 16 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உத்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.*

*11. பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதி அட்டையை பரீட்சைத் தினத்திற்கு குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன் பெறாதிருந்தால் அவரால் அது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தந்தி அனுப்பும் விலாசம் : பரீட்சை, கொழும்பு) என்ற விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளர் நாயகத்தோடு தாமதமின்றி தொடர்புகொண்டு தனது அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதை பின்வரும் தகவல்களுடன் அறிவிக்க வேண்டும் :-*

1. *பரீட்சையின் பெயர் ;*
2. *முழுப்பெயர் ;*
3. *முழுமையான தபால் விலாசம் ;*
4. *தபால் பணிமனை பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய திகதியும்.*

*அண்மையிலுள்ளவர்கள் பரீட்சை ஆணையாளருடன் "ஈ" கிளைத் தலைவர் மூலம் தொடர்புகொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகின்றது.*

*12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.*

*13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971, யூன் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ். ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும்.*

*14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :*

*(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.*
*(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-*

| | |
|---|---|
| *முழுப்பரீட்சை* | *- ரூபா 100.00* |
| *ஒரு பாடம்* | *- ரூபா 50.00* |

*பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு பெறுமதி நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்படல் வேண்டும்.*

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள்.

சுனிமல் சேனாரத்ன,
செயலாளர்,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2007*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.
2. பிறந்த திகதி :----.
3. பதவிப் பெயர் :----.
   திணைக்களத்தின் பெயர் :----.
4. அஞ்சல் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :----.
5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
6. விண்ணப்பிக்கும் பரீட்சை (பொருத்தமற்றதை நீக்கிவிடுக) :-
   (அ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை
   (ஆ) இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை
7. அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்) :-

   (i) பாட எண் .............. பாடம் ..............
   (ii) பாட எண் .............. பாடம் ..............
   (iii) பாட எண் .............. பாடம் ..............
   (iv) பாட எண் .............. பாடம் ..............

8. உத்தியோகத்தர் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :----.
9. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.
10. செலுத்தப்பட்ட தொகை ரூபா :----.

| முத்திரைக்கூடு |
|---|

----,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்து காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும் எட்டாம் பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமையுடையவரென்றும் விண்ணப்பக்காரர் முத்திரை/முத்திரைகளை முறையாக ஒட்டி பெறுமதி நீக்கம் செய்துள்ளார் எனவும் பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

*பின்னிணைப்பு "அ"*

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(1) நிதி முறை
(2) நிருவாகம்
(3) திணைக்களப் பிரமாணங்கள் I
(4) திணைக்களப் பிரமாணங்கள் II

(1) **நிதி முறை**.- நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்குவிதி பகுதி 1 (10 அத்தியாயம் தவிர்ந்து)
(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகள்.- உதாரணம் :- வருமானத் தலைப்பு தயாரித்தல் அரசிறை தலைப்புகள் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்
(இ) கச்சேரிகள் ஊடாக விசேடமாக மேற்கொள்ளப்படும் கணக்குகள் சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

(2) **நிருவாகம்**.- நிருவாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) அலுவலக மற்றும் துறைகளை ஒழுங்குபடுத்தும் முறைமைகள்
(ஆ) தாபனக் கோவை அத்தியாயம் I, II, III, V, VI, VII, IX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) திணைக்களப் பிரமாணங்கள் I.- திணைக்களப் பிரமாணம் தொடர்பான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

ஸ்பரிசத்துடன் தொற்றிப் பரவும் தொற்று நோய்க்கான சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

4. திணைக்களப் பிரமாணங்கள் II.- பின்வரும் பாடங்களுக்கு 03 மணித்தியால வினாப்பத்திரம் :-

(1) மாதிரிகளை அனுப்புதல் பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனைகள், விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள் ;

(2) செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயல்முறையும் தொழிநுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போஷணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கல்நடைப் பராமரிப்பு என்பன ;

(3) பால் உற்பத்தி, கிருமியளிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம் பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

*பின்னிணைப்பு "ஆ"*

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III – வினாத்தாள்-

1. தொற்றுநோயியல்
2. கால்நடைப் பொருளியல்
3. மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
4. விவசாய விஸ்தரிப்பு
5. பரம்பரையியல் சினைப்படுத்தல்
6. விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும்
7. வீடமைப்பு முகாமைத்துவம்
8. விலங்குப் போசணை
9. பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
10. செயல்பாட்டு நுண்ணுயிர் இனவியலும் நீர்ப்பீடணவியலும்
11. மருத்துவ பயன்படுத்துகை நோயியல் ஒட்டுண்ணியல்

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

5-236

---

## ஆயுள்வேத வைத்திய சேவையின் வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2008

இலங்கை ஆயுர்வேத சேவையிலுள்ள வைத்திய உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் நடாத்தப்பட உள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது. இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படும்.

1. ஆயுர்வேத திணைக்களத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக கடமைப்பட்டவராவர்.

2. விண்ணப்பம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2008.05.30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் இல்லை. அதன் பின் தோற்றும் பரீட்சை முழுவதற்குமாக ரூபா 90 பெறுமதியான முத்திரையும், ஒரு பாடத்திற்கு தோற்றுவதற்கு ரூபா 50 பெறுமதியான முத்திரையும் ஒட்டி, கையொப்பமும் திகதியும் இடப்பட்டு அம்முத்திரை பெறுமதி நீக்கம் செய்யப்படல் வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்படமாட்டாது.

3. **பரீசார்த்திகளின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான ஓர் கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும், அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள், பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு, பரீட்சைத் திகதிக்குக் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும், பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர், "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேத திணைக்களம், நாவின்ன, மகரகம" எனும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் அறிவிக்க வேண்டும் :

(i) பரீட்சையின் பெயர்
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர்
(iii) பரீட்சார்த்தியின் முகவரி
(iv) விண்ணப்பம் அஞ்சலிட்ட திகதி, அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம்.

5. **பரீட்சைத் திட்டம்.**- இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவை யாப்புக்கு ஏற்றவாறு அனுமதிக்கப்பட்ட பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நடாத்தப்படும்.-

(i) கணக்கு நடைமுறைகள் : கீழ்வருவன உள்ளடக்கிய ஒரு கேள்வித்தாள் :
(அ) இலங்கைச் சனநாயக குடியரசின் கணக்கு நடைமுறைகள் பகுதி I (X அத்தியாயம் நீங்கலாக)

(II) தாபன விதிக்கோவை – கீழ்வருவன உள்ளடக்கிய ஓர் கேள்வித்தாள் -

(அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை பகுதி I – I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள்.

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை பகுதி II – XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) ஆரோக்கியசாலை பரிபாலனம்.- கீழ்வரும் விடயங்கள் அடங்கிய வினாத்தாள் -

(i) ஆரோக்கியசாலை சம்பந்தமான உரிமைகள் பேணுவதற்கான சாதாரண சட்டதிட்டங்கள்

(ii) ஆரோக்கியசாலை சுத்தம்

(iii) நோயாளிகள் சம்பந்தமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள்

(iv) நோயாளிகளுக்கான பொருத்தமான உணவு, பானம் பெறும் விதிமுறைகள்

(v) மருந்து உற்பத்தி பகுதி பரிபாலனம்

(vi) ஆரோக்கியசாலையின் சாதாரண நிர்வாக நடைமுறைகள்

(vii) ஆயுர்வேத திணைக்களத்தின் சாதாரண நிர்வாக நடைமுறைகள்

(viii) நோயாளர்களை ஆரோக்கியசாலைக்கு அனுமதிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய சட்டதிட்டங்கள்

(ix) ஆரோக்கியசாலை மருத்துவ கண்காணிப்பாளர் தொடக்கம் துணை அலுவலர்கள் வரையிலான அலுவலர்களின் கடமைகள்

(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலை கணக்கு பேரேடுகள், பதிவேடுகள் நடைமுறைப் படுத்துவதற்கான நடைமுறைகள்

(xi) ஆயுர்வேத திணைக்கள ஒழுங்குவிதிகள்.

(IV) அரச மொழி வாய்மூல பரீட்சை.- சிங்களம்/தமிழ்

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைக்கப்பட்ட அலுவலர்களுக்கு - தமிழ்

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடை தருதல்.

(ஆ) தமிழ் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்

(இ) சிங்கள வசனங்களை தமிழ் மொழியில் கூறுதல்

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைக்கப்பட்ட அலுவலர்களுக்கு –

(அ) சிங்கள மொழியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்கள மொழியில் விடை தருதல்

(ஆ) சிங்கள மொழி வசனங்களை தமிழில் கூறுதல்

(இ) தமிழ் வசனங்களை சிங்கள மொழியில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது 40 புள்ளிகள் பெறுதல் வேண்டும்.

ஆர். பி. டபிள்யு. குணவர்த்தன,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்ன,
2008.04.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத வைத்திய சேவையின் அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை - 2008**

பரீட்சை எண் : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - S, தமிழ் - T, [ ]
(பொருத்தமான எழுத்தை கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (Mr./Mrs/Miss) :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

2. முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :-----.
(தமிழ்/சிங்களம்)

3. முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

4. முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-----.
(சிங்களம்/தமிழ்)

5. தேசிய அடையாள அட்டை இல. :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. கடமைபுரியும் அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனம் பெயரும் விலாசமும் :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

7. கடமைபுரியும் அலுவலகம்/ திணைக்களம்/ நிறுவனம் பெயரும் விலாசமும் :-----.
(தமிழ்/சிங்களம்)

8. தற்போதைய பதவி :-
(i) பதவி :-----.
(ii) நியமனக் கடித இலக்கம் :-----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :-

| தொடர் இல. | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |

10. நீங்கள் அரசமொழி கருமச் சட்டம் சம்பந்தமாக உள்ளீர்க்கப் பட்டவர்களா அல்லது புதிய பிரவேசமா ? :-----.

11. நீங்கள் இதற்கு முன் பரீட்சைக்கு கீழ்வரும் பாடத்திற்கோ அல்லது பாடங்களுக்கோ தோற்றி சித்தியடைந்துள்ளீர்களா ? :-----.
(நிதிப் பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ ஆரோக்கியசாலை நிர்வாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்) :-----.
அப்படியாயின் பாடஎண் பாடம், பரீட்சை நடைபெற்ற திகதி குறிப்பிடவும்.)

12. நீங்கள் பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றுகின்றீர்களா ? :----.
முதன் முறையாக பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி

முத்திரைக்கூடு

| |
|---|
| முழுப் பரீட்சைக்கான ரூபா 90, ஒரு பாடமாயின் ரூபா 50 பெறுமதியான முத்திரை இங்கு ஒட்டிவிடவும் |

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். முத்திரைகளை ஒன்றின்மேல் ஒன்று ஒட்டுதலாகாது.

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் மேலே காட்டப்பட்டுள்ள மொழிமூலமாக பரீட்சைக்கு தோற்றுவதற்கு நான் உரித்துடையேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன். அதில் ஒட்டப்பட்டுள்ள ரூபா ................. பெறுமதியான முத்திரை/முத்திரைகள் செல்லுபடியானவை என்றும் முன்னர் உபயோகிக்கப்படாதவை எனவும் நான் உறுதிமொழிகின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகிறேன்.

....................................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத்தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னிலையில் கையொப்பமிட வேண்டும்.

கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

திரு./ திருமதி/ செல்வி .................................................................. எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும் ................ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

......................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

### அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2008

1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் பந்தி 08 இன்கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின்படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2008, ஓகத்து மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2008, யூன் மாதம் 16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பு ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முன்வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

3. (i) விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 2.10 வரையிலான பந்திகளை 1 ஆவது பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவம் 8'' x 12'' அளவிலான தாளொன்றின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சிலிட்டு தயார் செய்து கொள்ள முடியுமாயினும் அதை விண்ணப்பதாரரின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமை பெறாத தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்று தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ii) அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கங்களுக்காக சகல அலுவலர்களும் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றினை அதே மொழியில் நிரப்பவும் வேண்டும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

**4. பாடவிதானமும் பரீட்சைத் திட்டமும் :**

முதலாம் பாடம்.- வினாத்தாள் இல. 01 :

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்
(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் :-

(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை;அத்துடன்
(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

விண்ணப்பதாரர்கள் தனது மொழிபெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்-

(i) சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு

(ii) சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு
(iii) தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு

மூன்று (03) மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்று - 100 புள்ளிகள்

*இரண்டாம் பாடம் - வினாத்தாள் இல. 02*

(i) பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி ; அத்துடன்
(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள்:-

(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை அத்துடன்
(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை

விண்ணப்பதாரர்கள் தனது மொழி மூலத்திற் கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்-

(i) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு
(ii) ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு
(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு

மூன்று 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்று - 100 புள்ளிகள்

*இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும் :-

(அ) முதன் முறைக்காக கட்டணமெதுவும் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அடுத்துள்ள சந்தர்ப்பத்தில் தோற்றுவதற்கான கட்டணங்கள் முழுப்பரீட்சை எடுப்பதற்கு ரூபா 175 ஆகவும் தனித்து ஒரு பாடம் எடுப்பின் ரூபா 90 ஆகவும் இருக்கும்.

(இ) பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைத்து தீவில் அமைந்திருக்கும் எந்தவொரு தபால் அலுவலகத்திற்கும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (i) விண்ணப்பங்களை அனுப்பிவைத்த சகல பரீட்சார்த்தி களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் இன்றி அவர்களை பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கோ அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிக்கையொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மூலம் அறிவிக்கப்படும். அறிவிப்பு வெளியாகி 2/3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதிஅட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவம் தொடர்பாக உரிய பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய புகைப்படப் பிரதியொன்றும் பதிவுசெய்த பற்றுச்சீட்டு ஒன்றும் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமெனில் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பக்ஸ் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதம் ஒன்றை உங்கள் வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி அட்டையுடன் பிரத்தியேகமாக நேரசூசியொன்றும் வழங்கப்படும்.

(iii) இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அவ்விதித்துரைகளை மீறுவதன் பேரில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எத்தண்டனையும் அனுபவிக்க அவர்கள் ஆளாக்கப்படுவார்கள்.

(iv) விண்ணப்பதாரிகளுக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சை எடுப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதானது ஒரு விண்ணப்பதாரர் அப்பரீட்சையை எடுப்பதற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

8. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதாக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு

அனுமதி அட்டையுடன் மேற்போன்ற ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

10. பரீட்சைத் திகதிக்கு ஏழு நாட்களுக்கு முன் அனுமதி அட்டை விண்ணப்பதாரியொருவருக்குக் கிடைக்கப்பெறாவிடின், அவர் தாமதமெதுவுமின்றி, பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு (தந்தி அனுப்பும் முகவரி : "பரீட்சை",

பத்தரமுல்ல) அவர் பின்வரும் தகவல்களுடன், தமக்கு அத்தேதி வரை அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்பதனை தொடர்புகொண்டு எழுத்தில் தெரிவித்தல் வேண்டும் :

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(இ) முழு முகவரி ;
(ஈ) திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பம் தபாலில் இடப்பட்ட திகதி, அஞ்சல் அலுவலகம், பதிவு செய்யப்பட்ட இலக்கம் ;
(உ) பணம் செலுத்தப்பட்டிருப்பின் அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி.

11. இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயமெதற்கும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் முடிவே இறுதி தீர்மானமாயிருக்கும்.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

இணைந்த சேவைகள் பிரிவு,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2008, ஏப்பிறல் 29.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2008**

Efficiency Bar Examination For Officers in Class I of the Government Translators' Service – 2008

(**கவனிக்க வேண்டியது** : விண்ணப்பப்படிவத்தை சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.)

1. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இற்கு அமைய நீங்கள் மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய முறை

வினாத்தாள் இலக்கம் 01 :
சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 1
சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு - 2
தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 02 :
தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு - 4
ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு - 5
ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 6
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 01 அல்லது வினாத்தாள் இலக்கம் 02 அல்லது இரு வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

2. **தனிப்பட்ட விடயங்கள் :**

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ----.

உதாரணம் : SILVA, A. B.

2.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 அலுவலக/திணைக்கள/அமைச்சின் பெயர் :----.

2.5 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

2.6 பால் : (பெண்-1, ஆண்-0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.7 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.9 தற்போது வகிக்கும் பதவி :----.

2.10 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

3. 3.1 நீர் இப்பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றுகின்றீரா ? :----.

3.2 இல்லாவிட்டால், பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின் இலக்கம் : ----.
திகதி :----.
வழங்கப்பட்ட அஞ்சல் அலுவலகம் :----.

ஒரு பாடத்திற்கு ரூபா 90 உம், முழுப் பரீட்சைக்கு ரூபா 175 உம் வேண்டிய எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை இதில் ஒட்டிவிடல் வேண்டும்.
பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்

4. **விண்ணப்பதாரியின் சான்றிதழ் :**

மேற்தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப் படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5. ***திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்திலுள்ள மொழிபெயர்ப் பாளர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர் என்றும்,

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும்,

(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,

(iv) இவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும்,

(v) இவரால் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்றது எனின் கீறிவிடவும்.)

இத்தால் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

5-321